**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.P.சுபாஷினி, பி.ஏ., பி.எல்.,</u>

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2022 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாள் திங்கட்கிழமை</u>

**<u>ஐ.ஏ.எண்.04/2021 இன் அ.வ.எண்.180/2021</u>**

பழனிச்சாமி ... மனுதாரர் / பிரதிவாதி

/ எதிர் /

மகாலிங்கம் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது கடந்த 22.03.2022 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி, அவர்கள் ஆஜராகியும் உள்ள நிலையில், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது, மனுதாரரின் அமைதியான சுவாதீனத்தில் உள்ள மனுச்சொத்தில் எதிர்மனுதாரர் அத்துமீறி உள் நுழைந்து இம்மனுமீதான விசாரணை நிறைவுபெறும் நாள் வரை இடையூறு செய்யாதிருக்க வேண்டி ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரரது மனு சங்கதியின் சுருக்கம் :</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியாவார். எதிர்மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை. தாவா சொத்திற்கு மனுதாரர் முழு உரிமையாளர் ஆவார். தாவா சொத்துக்களும், இதர சொத்துக்களும் எதிர்மனுதாரரின் தாத்தாவான கைலாசப்பகவுண்டருக்கு

பாத்தியப்பட்டது என்பது தவறாகும். அதற்கு கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிர்மனுதாரரின் தகப்பனார் இறந்த பிறகு எதிர்மனுதாரரும், இதர வாரிசுகளும் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்பது இந்த மனுதாரருக்கு தெரியாது. அதில் இந்த மனுதாரர் தரப்பினர் அல்ல. மேற்படி பாகப்பரிவினை பத்திரத்தில் எந்தவொரு சட்ட உரிமையும் இல்லாமல் தாவா சொத்துக்களானது சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பாகப்பத்திரமானது இந்த மனுதாரரை கட்டுப்படுத்தாது. மேற்படி பாகப்பத்திரத்தின்படி எதிர்மனுதாரரும், அவரது தாயாரும் தாவா சொத்துக்கனை அடைந்து அனுபவித்து வந்தனர் என்பது தவறாகும். தாவா சொத்தில் மனுதாரர் தென்னை மரங்களை பரியிரிட்டு இருந்தார் என்பது தவறாகும். எதிர்மனுதாரரே தாவா சொத்தில் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளார். தாவா சொத்தில் மனுதாரர் தென்னை பயிரிடும் போது அதனை மனுதாரர் இடையூறு செய்தார் என்று கூறியுள்ளது தவறாகும். மனுதாரர் அவரது மனுவில் முன்னுக்குபின் முரணாக தகவல்களை குறிப்பிட்டுள்ளார். மேலும், வசதியுரிமையினை மனுதாரர் இடையூறு செய்கிறார் என்பதும் தவறாகும். மேலும், மனுதாரர் சட்டவிரோதமாக தாவா சொத்தில் நுழைந்து தாவா சொத்தினை சேதப்படுத்தினார் என்பதும் அர்த்தமற்றதாகும். எதிர்மனுதாரரின் மனுவானது இந்த மனுதாரரின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களும், அருகிலுள்ள சுமார் 600 ஏக்கர் சொத்துக்களும் ஒரு கெட்டி செட்டியார் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்டதாகும். 1958-ம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி மேற்படி குடும்ப சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டு சுமார் 100 ஏக்கர் சொத்துக்கள் ஒரு பரமசிவம் (எ) செல்வனுக்கு F ஷெட்யூலாக ஒதுக்கப்பட்டது. இதர சொத்துக்கள் இதர வாரிசுதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டது. பரமசிவம் (எ) செல்வன் கெட்டிசெட்டியாரின் பேரனாவார். தாவா சொத்துகளுக்கு மேற்படி பரமசிவம்

என்பவரே ஆரம்பத்தில் முழு உரிமையாளராவார். அவரே தாவா சொத்தின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார். தாவா சொத்தினை மேற்படி பரமசிவம் என்பவர் இந்த மனுதாரரின் தகப்பனாருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட கிரைய சாசனம் மூலம் 30.05.1973-ம் ஆண்டு பாத்தியப்படுத்தியுள்ளார். மேற்படி கிரையத்திற்கு பிறகு இந்த மனுதாரரின் தகப்பனாரே முழு உரிமையாளராக தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளார். இந்த மனுதாரரின் தகப்பனார் காலமான பிறகு அவரது ஒரே மகனான இந்த மனுதாரர் தாவா சொத்தின் முழு உரிமையாளராக சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளார். எதிர்மனுதாரரின் மற்றொரு சொத்திற்கு தொட்ட மேல்புறமாக 98 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமியே தாவா சொத்தாகும். கிழபுறம் இந்த மனுதாரரின் மற்றொரு சொத்து அமைந்துள்ளது. சில தினங்களுக்கு முன்பு எதிர்மனுதாரர் அனைத்து சொத்துக்களிலும் தென்னை பயிரிட்டார். கடந்த 2 மாத காலமாக எதிர்மனுதாரர் மனுதாரரின் தாவா சொத்தில் இடையூறு செய்ய முயன்று வருகிறார். அதனை மனுதாரர் காவல் துறை மூலம் தடுத்துவருகிறார். கடந்த 10.07.2021 தேதியில் எதிர்மனுதாரர் மனுதாரரின் சொத்துக்களை ஆக்கிரமிப்பு செய்யவேண்டும் என்கிற நோக்கதோடு தற்காலிகமாக தண்ணீர் பைப்லைன் அமைத்து நீர்பாய்ச்சி வருகிறார். உண்மையில், பைப்லைன் அமைக்க வேண்டுமானால் அது நிலத்தடியில் தான் அமைக்கப்படவேண்டும். ஆனால், வழக்கு தாக்கல் செய்வதற்காகவும், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், 10.07.2021 தேதியில் எதிர்மனுதாரர் அவ்வாறு நிலத்தின் மேல்புறத்தில் பைப்லைன் அமைத்துள்ளார். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரும் வழக்கில் சுவாதீனத்தல் யார் உள்ளார் என்பதை காட்டுவதற்கு, நீதிமன்ற ஆணையர் நியமனம் கோர இயலாது. மேலும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுசொத்து விபர பகுதியில் நான்குஎல்லை விபரம் குறிப்பிடப்படவில்லை. தாவா சொத்தினை 1973-ம்

ஆண்டு இந்த மனுதாரரின் தகப்பனார் கிரையம் பெற்ற நாள்முதல் இந்த மனுதாரின் குடும்பம் மட்டுமே அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது. மேலும், எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு அவரது பெயருக்கு பட்டா பெற்ற விபரம் நீதிமன்றத்தலிருந்து மனுதாரருக்கு அறிவிப்பு வந்தபிறகு தான் மனுதாரருக்கு தெரியவந்துள்ளது. எனவே, வருவாய்துறை அலுவலகத்தில் பட்டாவை பொறுத்து மனுதாரர் உரிய நடவடிக்கை எடுக்க உள்ளார். இந்த மனுதாரரின் தகப்பனார் பெயரில் உள்ள தாவா சொத்துக்களுக்கு வருவாய்துறை தவறாக எதிர்மனுதாரர் பெயருக்கு சிட்டா வழங்கியுள்ளது. மேற்படி பட்டாவானது தாவா சொத்தில் எந்தவொரு உரிமையையோ அல்லது பாத்தியத்தையோ ஏற்படுத்தாது. மேலும், 0.98 செண்ட் விஸ்தீரணமுள்ள நிலமானது ஒரு பரமசிவம் என்பவருக்கு பாத்தியப்பட்டு 30.05.1973–ல் ஏற்பட்ட 3 கிரைய ஆவணங்கள்படி 1) இந்த மனுதாரரின் தகப்பனார் சென்னியப்பகவுண்டருக்கு 3 ல் 1 பங்கும், 2) இந்த மனுதாரரின் பாட்டனாருக்கு 3–ல் 1 பங்கும், 3) ஒரு மயில்சாமிகவுண்டர் என்பவருக்கு 3–ல் 1 பங்கும் கிரையம்செய்து கொடுக்கப்பட்டது. எனவே, மேற்படி 0.98 ஏக்கர் நிலங்கள் இந்த மனுதாரரின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. மேற்படி மயில்சாமிகவுண்டர் என்பவர் மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர் ஆவார். மேற்படி மயில்சாமிகவுண்டர் காலமானபிறகு அவரது மனைவியின் கோரிக்கையின்படி மயில்சாமிகவுண்டரின் பாகத்தையும், மனுதாரரே அனுபவித்து வருகிறார். இந்நிலையில் கடந்த ஒரு மாதகாலமாக மனுதாரரின் சொத்தில் எதிர்மனுதாரர்/வாதி இடையூறு செய்துவருகிறார். அதனை மனுதாரர் பெரும் சிரமத்துடன் தடுத்துவருகிறார். எனவே, எதிர்மனுதாரர்/வாதிக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரரின் எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :

மனுதாரரின் மனு பொய்யும், மோசடியானதும், சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல என்றும், எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுச்சொத்துக்கள் வாதிக்கும், அவரது மூதாதையர்களுக்கும் சர்வசுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும். தாவாச்சொத்துக்களின் செக்குபந்தி கண்டிராததால் தாவாச் சொத்துக்கள் வாதியின் சுவாதீனத்தில் இல்லை என்றும் குறிப்பிடும் சங்கதி தவறாகும். தாவாச்சொத்துக்கள் சப்டிவிஷன் செய்யப்பட்டு அதன் க.ச.எண்.107/1A ஆகும். ஒரே சப்டிவிஷனில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு பூமியிருக்கும்பட்சம், அதன் விஸ்தீரணமும், செக்குபந்தியும் மிகவும் அவசியமான ஒன்றாகும், ஆனால் இவ்வழக்கில் க.ச.எண்.107/1A முழுவதும் எதிர்மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும். தாவாச்சொத்துக்களும், இன்னபிற சொத்துக்களும் ஏதோ ஒரு கெட்டி செட்டியாருக்கு மொத்தம் 600 ஏக்கர் பூமி பாத்தியதை என்ற சங்கதி முற்றிலும் பொய்யாகும். அதை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மேலும், கடந்த 17.01.1958 தேதியில் ஒரு பரமசிவத்திற்கு கிடைக்கப்பெற்றதாக கூறுவது பொய். கடந்த 3.05.1973 அன்று தேதியில் தாவாச்சொத்துக்களின் பிரதிவாதியின் தந்தை, பிரதிவாதியின் தந்தையின் தந்தை மற்றும் தந்தையின் இளைய சகோதரர் மயில்சாமி ஆகியோர் மூவருக்கும் பாகம் பிரிபடாதபடிக்கு பொதுவில் பாத்தியப்பட்டது என்று பிரதிவாதி குறிப்பிடுகிறார், ஆக கடந்த 3.05.1973 அன்று தேதியில் 3 கிரயப் பத்திரங்களின் வாயிலாக மேற்படியார்கள் மூவரும் கிரயம் பெற்றுள்ள சூழ்நிலையில் மேற்படியார்கள் மூவரும் தங்களுக்குள் தாவாச் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொண்டனரா என்றும், மூவரும் உயிருடன் உள்ளனரா அல்லது அவர்கள் வாரிசுகள் பிரதிவாதியை வழக்காடிட

அனுமதித்திருப்பதாகவோ பிரதிவாதி வழக்காடிடவில்லை. மேற்படி மூவருக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட சொத்தில் பிரதிவாதி மட்டும் பாத்தியதை கொண்டாடிட உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதி பெற்றவரல்ல. மனுச்சொத்தானது 1983-ம் ஆண்டு முதல் மனுதாரரின் தந்தையின் தந்தையான கைலாசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வந்த சொத்தாகும். மேற்படி கைலாசப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொருத்து அவர் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் அவரது மனைவி குழந்தையம்மாள், மகன்கள் நடராஜன், எதிர்மனுதாரரின் தகப்பனார் கந்தசாமி ஆகியோர்களை அவரது சொத்துகளுக்கு வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். அதன்பின்னிட்டு, மேற்படி கைலாசப்பகவுண்டரின் மகனும், எதிர்மனுதாரரின் தகப்பனாருமான கந்தசாமி அவர்கள் கடந்த 05.02.1998 அன்று தேதியில் காலமாகிவிட்டார். கந்தசாமி காலமானதற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான மனுதாரரும், அவரது தாயார் அன்னாம்மாள், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள், மகன் நடராஜன் ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 17.04.2008-ம் தேதி ஒரு பாகசாசனப் பத்திரத்தை ஏற்படுத்திக் கொண்டார்கள். மேற்படி பாகசாசனப்படி பிரிந்த சொத்துக்களில் எதிர்மனுதாரருக்கும், அவரது தாயாருக்கும் 'சி' செட்யூல் சொத்துக்கள் கூட்டாக பாத்தியப்பட்டு அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அவரவர்கள் தனி சுவாதீனம் பெற்று அனுபவித்து வருகிறார்கள். அதன்பின்னிட்டு எதிர்மனுதாரரின் தாயார் அன்னம்மாள் கடந்த 14.08.2019-ம் தேதி காலமாகிவிட்டார். மேற்படி அன்னம்மாள் காலமானதன் பின்னிட்டு மேற்கண்ட வகையில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 'சி' செட்யூல் சொத்துக்கள் முழுவதையும் எதிர்மனுதாரர் அடைந்து அவருடைய தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். மேற்குறிப்பிட்ட 'சி' செட்யூல் சொத்துக்களின் ஒரு பகுதியே தாவா சொத்தாகும். மேற்படி அனுபவித்து வருவதில் இடையூறு

விளைவித்தமையாலும் சொத்துக்களில் உள்ள தென்னை பயிர்களை அழித்திட முயற்சித்தமையாலும், எதிர்மனுதாரர் மேற்படி அ.வ.எண்.180/2021 தாக்கல் செய்துள்ளார். எதிர்னுமாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பத்திரம் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் மனுதாரரை கட்டுப்படுத்தும். எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்த பிறகு பைப்லைன் பதித்தாகவும், தென்னை பயிரிட்டதாகவும் குறிப்பிடும் சங்கதிகள் பொய்யாகும். மனுதாரருக்கு வழக்கு மூலம் இல்லை. எனவே, இம்மனு எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6) <u>பிரச்சினை</u>** :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.5** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.16** வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற சான்றாவணங்கள் **நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2** குறியீடு செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர் தரப்பில் **ம.சா.ஆ.1** ஆக 17.01.1958 தேதியிட்ட பாகசாசனப் பத்திரத்தின் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.2** ஆக 30.05.1973 தேதியிட்டு சென்னிமலையப்பகவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.3** ஆக 30.05.1973 தேதியிட்டு சிவன்மலைக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட

நகலாகவும், **ம.சா.ஆ.4** ஆக 30.05.1973 தேதியிட்டு மயில்சாமிக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **ம.சா.ஆ.5** ஆக 26.07.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது அளித்த புகாரின் ஒளிநகலாகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** ஆக 17.04.2008 தேதியிட்ட எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகலாகவும், **எ.ம.சா.ஆ.2** ஆக 03.10.2001 தேதியிட்ட கந்தாய வரி ரசீது அசலாகவும், **எ.ம.சா.ஆ.3** 10.02.2003 தேதியிட்டு கந்தாய வரி ரசீது அசலாகவும், **எ.ம.சா.ஆ.4** ஆக 04.03.2005 தேதியிட்டு கந்தாய வரி ரசீது அசலாகவும், **எ.ம.சா.ஆ.5** ஆக 23.12.2020 தேதியிட்ட கந்தாய வரி ரசீது அசலாகவும், **எ.ம.சா.ஆ.6** ஆக 05.02.2005 தேதியிட்டு கைலாசப்பகவுண்டர் பெயரிலுள்ள பட்டா அசலாகவும், **எ.ம.சா.ஆ.7** ஆக 07.07.2021 தேதியிட்ட எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள கணினி சிட்டாவாகவும், **எ.ம.சா.ஆ.8** ஆக 13.02.1998 தேதியிட்ட கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.9** ஆக 02.05.2005 தேதியிட்ட கந்தசாமி வாரிசு சான்றிதழ் ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.10** ஆக 14.08.2019 தேதியிட்டு அன்னம்மாள் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.11** ஆக எதிர்மனுதாரரின் பெயரிலுள்ள ஆதார் அட்டை ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.12** ஆக 17.04.2008 தேதியிட்ட எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட அசலாகவும், **எ.ம.சா.ஆ.13** ஆக கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள நிலஉரிமை பதிவேடு அசலாகவும், **எ.ம.சா.ஆ.14** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1A வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும்,

**எ.ம.சா.ஆ.15** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1B, 1C வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும், **எ.ம.சா.ஆ.16** ஆக 18.08.2021 தேதியிட்டு கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.113/2 வழங்கிய வரைபடம் ஒளிநகலாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் **நீ.மா.சா.ஆ.1** மற்றும் **நீ.மா.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7)** ஆக, இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு, எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் தாவா சொத்துக்களானது 1958–ம் தேதிய பாகப்பத்திரத்தின்படி ஒரு பரமசிவத்திற்கு பாத்தியப்பட்டு அதன்பிறகு பரமசிவன் ஏற்படுத்திய மூன்று கிரைய ஆவணங்கள்படி மனுச்சொத்தானது மனுதாரரின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி 3 கிரைய ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் சொத்துக்களானது தற்போது மனுதாரரின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் உள்ளது என்றும், 2008–ம் ஆண்டில் மனுச்சொத்தையும் சேர்த்து எதிர்மனுதாரர் ஏற்படுத்திய பாகப்பத்திரம் ஆனது சட்டவிரோதமானது என்றும், அதைப்பற்றி இந்த மனுதாரருக்கு தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், தாவா சொத்துக்கள் குறித்து எதிர்மனுதாரர் பெயருக்கு தவறுதலாக சிட்டா வழங்கப்பட்டுள்ளது என்றும், பாகப்பத்திரமோ அல்லது சிட்டாவோ எதிர்மனுதாரருக்கு எந்தவொரு உரிமையையும் ஏற்படுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுச்சொத்துக்களானது எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றும், மனுதாரர் குறிப்பிடும் 1973 தேதிய கிரைய ஆவணத்தின்படி மேற்படி கிரையப்பத்தித்தில் உள்ள நபர்கள் உயிருடன் உள்ளனரா, இல்லையா என்பதை பொறுத்து மனுதாரா எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில் தாவா சொத்தானது மனுதாரரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் அவ்வாறு மனுச்சொத்துக்களானது மனுதாரரின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் உள்ளது என்பதற்கு எந்தவொரு வருவாய்துறை ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரரின் தகப்பனாருக்கு 1973 தேதிய கிரையத்தின்படி மனுச்சொத்து பாத்தியப்பட்டது என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் தகப்பனார் காலமானபிறகு மனுதாரரின் தகப்பனாருக்கு வாரிசுகள் யார்யார்என்றோ, எவ்வாறு மனுச்சொத்துக்கள் மனுதாரருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பது குறித்தோ, மனுதாரர் தரப்பில் எந்தவொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், இம்மனுவில் மனுதாரர் கோரும் பரிகாரமானது அசல் வழக்கில் இருதரப்பில் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இம்மனுவை அனுமதிக்க போதிய முகாந்திரம் இல்லை என்று கருதி இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று கருதி இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**8)** முடிவில், இம்மனு அசல் வழக்கிற்கு குந்தகம் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை 2022ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

P SUBHASHINI Digitally signed by P SUBHASHINI Date: 2022.04.12 10:47:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.01.1958 | பாகசாசனப் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 30.05.1973 | சென்னியப்பக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | 30.05.1973 | சிவன்மலைக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | 30.05.1973 | மயில்சாமிக்கவுண்டர் பெயருக்கு வழங்கப்பட்ட கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 26.07.2021 | கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது அளித்த புகாரின் ஒளிநகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 17.04.2008 | எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 03.10.2001 | கந்தாய வரி ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.3 | 10.02.2003 | கந்தாய வரி ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.4 | 04.03.2005 | கந்தாய வரி ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.5 | 23.12.2020 | கந்தாய வரி ரசீது அசல் |
| எ.ம.சா.ஆ.6 | 05.02.2005 | கைலாசப்பகவுண்டர் பெயரிலுள்ள பட்டா அசல் |
| எ.ம.சா.ஆ.7 | 07.07.2021 | எதிர்மனுதாரரின் பெயரில் உள்ள கணினி சிட்டா |
| எ.ம.சா.ஆ.8 | 13.02.1998 | கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.9 | 02.05.2005 | கந்தசாமி வாரிசு சான்றிதழ் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.10 | 14.08.2019 | அன்னம்மாள் இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.11 | | எதிர்மனுதாரரின் பெயரிலுள்ள ஆதார் அட்டை ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.12 | 17.04.2008 | எதிர்மனுதாரர், எதிர்மனுதாரரின் தாயார், கைலாசப்பகவுண்டரின் மனைவி குழந்தையம்மாள் |

| | | |
|---|---|---|
| | | மற்றும் அவரது மகன் நடராஜன் ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பத்திரம் சான்றிட்ட அசல் |
| எ.ம.சா.ஆ.13 | | கைலாசப்பகவுண்டர் பெயரில் உள்ள நிலஉரிமை பதிவேடு அசல் |
| எ.ம.சா.ஆ.14 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1A வழங்கிய வரைபடம் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.15 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.17/1B, 1C வழங்கிய வரைபடம் ஒளிநகல் |
| எ.ம.சா.ஆ.16 | 18.08.2021 | கிணத்துக்கடவு வட்டாட்சியர் புல எண்.113/2 வழங்கிய வரைபடம் ஒளிநகல் |

**நீதிமன்ற சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| நீ.மா.சா.ஆ.1 | | நீதிமன்ற ஆணையரின் அறிக்கை |
| நீ.மா.சா.ஆ.2 | | வரைபடம் |

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில்**

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் பட்டியல் :**

**– இல்லை –**

P SUBHASHINI Digitally signed by P SUBHASHINI Date: 2022.04.12 10:48:01 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.